
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1110

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

திரைக்கதை வசனம்
## கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

48

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# சாதிக்கு எதிராக சமத்துவம் போதித்த ‘குலக்கொழுந்து’!

‘குலக்கொழுந்து’ திரைப்படத்திலும் சமூகப் போலித்தனங்கள், வறட்டுப் பெருமைகளுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை எழுதியிருப்பார் கலைஞர். ஜமீன் மானியத்துக்கு எதிராகவும், சாதி- வர்க்க ஏற்றத் தாழ்வுக்கு எதிராகவும், சாதி மறுப்புத் திருமணங்களை வலியுறுத்தியும், வசனம் எழுதியுள்ளதையும் காண்கிறோம்.

நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்பது, திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்பதை, கலைஞர் தனது திரைப்படங்களில் தொடர்ந்து பதிவு செய்து வந்துள்ளார். அந்த வகையில், ‘குலக்கொழுந்து’ திரைப்படத்திலும் ஜமீன்தாரின் இரண்டு மகன்கள் வழி, பரம்பரை கௌரவத்தை எதிர்த்து கடுமையாகப் பேச வைத்திருப்பார். குறிப்பாக, மாறிக் கொண்டிருக்கும் சமூக அமைப்பினையும் எழுத்தில் பிரதிபலித்தார்.

ஓட்டலில் நடனமாடும் பெண்களான பாமா, பிரேமா ஆகியோரை, ஜமீன்தாரின் இரண்டு மகன்களும் காதலித்துத் திருமணம் செய்து கொள்கின்றனர். மூத்தமகன் சந்திரமோகன் தனது திருமணத்துக்கு அனுமதி கேட்க, காதலி பாமாவை ஜமீன் மாளிகைக்கு அழைத்து வருவான். அந்தக் காட்சியில்,

ஜமீன்தார், தன் மனைவி அமுதவள்ளியை அழைத்து, “அமுதவள்ளி, உன் மகனும் அவன் நெஞ்சம் நிறைஞ்ச காதலியும் வந்துகிட்டு இருக்காங்க. சந்திரமோகன் கிட்ட கண்டிப்பா சொல்லிடு. அவன் தலைகீழா நின்னாலும் சரி, அந்தத் தரித்திரம் பிடித்தவளை, இந்த மாளிகை, மணமகளாக ஏற்காதுன்னு” எனக் கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிடுவார்.



‘அம்மா’ என்று பாசத்துடன் வரும் சந்திரமோகனிடம், “உங்கப்பாவோட மனச மாத்தவே முடியல. கோகினூர் வைரத்தக் கூட உங்கப்பா உனக்காக வாங்கித்தர தயார். நீ குப்பையில கிடக்குற குண்டுமணியைத் தேடாதேன்னு அவர் தீர்மானமா சொல்லிட்டார்’’ என்கிறார் அமுதவள்ளி.


அதற்கு, சந்திரமோகன் “அப்படின்னா? பாமாவை நான் திருமணம் செஞ்சுக்கிற முடியாது இல்ல. உங்க உத்தரவை மீறி நான் செஞ்சுக்கிட்டா?”

**அமுதவள்ளி:** “நான் என்னப்பா செய்யுறது? அவர் குணம் உனக்குத் தெரியாதா? பாமாவுக்கும் உனக்கும் கல்யாணம் நடந்தா நம்முடைய பந்தபாசம் எல்லாம் அறுந்து போயிடும் பா...”

**சந்திர மோகன் :** “ஓ பந்த பாசம், பணம், பங்களா இவற்றைக் காட்டி என்னைப் பயமுறுத்தப் பார்க்கிறீங்களா? எனக்கு இதெல்லாம் தேவையில்லை. எனக்குத் தேவை என் பாமாதான். என்னை நம்புனவளை நடுத்தெருவுல விட நான் தயாராயில்ல. அம்மா இறுதியா நா உங்ககிட்ட விடை பெறுகிறேன்” என்று சொல்லிவிட்டு, ரத்னகிரி மாளிகையை விட்டு வெளியேறுகிறான்.

### பாம்புக்கு பயப்படும் தவளைக்கூட்டம்

சந்திரமோகனும் பாமாவும் இறந்தவுடன் வெளிநாட்டிலிருந்து திரும்பும் இரண்டாவது மகன் தம்பிதுரையிடம் அவன் தாய் தன் பேரனை அழைத்துவரச் சொல்லும்போது அவன் பேசும் கலைஞரின் வசனங்கள்...


படங்கள் உதவி : ஞானம்

**அமுதவள்ளி:** “தம்பிதுரை காணாமல் போன என் (பேரன்) கண்ணனை எப்படியாவது கண்டு பிடிச்சு வீட்டுக்குக் கொண்டு வந்திரப்பா. உங்க அப்பா எனக்கும் உனக்கும் இட்ட கட்டளை இது. நீ தான் இதை நிறைவேற்றணும்.”

**தம்பிதுரை :** “அம்மா அன்னைக்கு அண்ணன் கேட்டப்ப, இறங்காத உங்க இதயம் அவன் இந்த உலகத்தை விட்டே போன பிறகு உருகுதோ..? ஏழை வீட்டுப் பொண்ணு இந்த மாளிகைக்கு மருமகளான்னு எரிஞ்சு விழுந்திங்களாமே அப்பாவும் நீங்களும். இப்ப மட்டும் அவர் பெத்த புள்ளைய பேரன் முறை கொண்டாடத் துடிக்கிறீங்களே? ஏன்? எதுக்காக?”

**அமுதவள்ளி:** “என் இரத்தம் இல்லையா? என் புள்ளை பெத்த செல்வம் இல்லையா?”

**தம்பிதுரை:** “இந்த உணர்ச்சி அப்பவே ஏற்பட்டிருந்தா, என் அண்ணன், அண்ணி அவங்க பெத்த கண்ணன் எல்லாரும், இந்த வீட்டுல உலவிக்கிட்டு இருப்பாங்களே... இப்போ?”

**அமுதவள்ளி:** ‘‘நடந்து முடிஞ்சதப் பேசாதே. நடக்க வேண்டியதப் பாரு”

**தம்பிதுரை:** ‘‘வீட்டையும் கொளுத்திட்டு, மேஜையில மெழுகுவர்த்தியத் தேடுறீங்க’’ என்று நக்கலாகக் கேட்கிறான்.

அடுத்து கோவாவுக்குச் செல்லும் தம்பிதுரை, பிரேமாவைச் சந்தித்து கண்ணனை தன்னுடன் அனுப்பும்படி கேட்கிறான். அப்போது பிரேமா...

**பிரேமா :** “நீங்களா? எங்கே வந்தீங்க?”

**தம்பிதுரை:** “ஏன் பிரேமா பாம்பைக் கண்ட கீரி மாதிரி இப்படிப் பாயுறே?”

**பிரேமா:** “நாங்க ஒன்னும் கீரியில்லை. தவளைக் கூட்டம். அதனாலதான் பாம்புக் கூட்டத்தப் பார்த்து பயப்படுறோம்”

**தம்பிதுரை:** “பாம்புமில்ல தவளையுமில்ல. பாசங்கொண்ட அண்ணனுக்குத் தம்பி நான். அவரோட நேசங் கொண்ட பாமாவுக்கு தங்கை நீ. நாம உறவுகளால பிணைக்கப்பட்டிருக்கிறோமே தவிர பகையினால பிளக்கப்படலை”

**பிரேமா:** “உறவு! உங்க அண்ணனைக் காதலிச்ச குத்தத்திற்காக, எங்க அக்கா உயிரையே குடிச்ச குடும்பத்தோட உறவு! வெக்கமா இல்ல?”

**தம்பிதுரை:** “உன் சகோதரி மட்டுமல்ல, என் சகோதரன் கூடத்தான் அந்த சதித்திட்டத்துல சவமானாரு”

**பிரேமா :** “உண்மைதான். யார் செஞ்சது அந்த சதியை? மகுடத்தை மட்டுமில்லை மனசாட்சியையும் இழந்துவிட்ட மாஜி மன்னர் இருக்காரே மகாகனம் பொருந்திய உங்க அப்பா அவருதான். உல்லாச உப்பரிகைக்குச் சொந்தக்காரரான அவர் மகன், ஓட்டல் பாடகியோடு வாழுறது ஒப்புக்கொள்ள முடியாதது. சகித்துக்கொள்ள முடியாதது. அவுங்க உயிரோடு இருக்கிறதே உங்க குடும்பத்துக்கு மானக்கேடு கோத்திரத்திற்கு சாபக்கேடுன்னு அவுங்க ரெண்டு பேரையும் கொன்னு குவிச்சுட்டாரே. இரக்கமில்லாத பாவி.”

**தம்பிதுரை:** “அப்படி நினைக்கவே நினைக்காதே. உன்னைய திருத்திக்க. சந்திரமோகன் இறந்த செய்தியைக் கேட்டதும், மனமொடிந்து நோய்வாய்ப்பட்ட எங்க அப்பா இன்னும் படுத்த படுக்கையாகவே இருக்கார்”

**பிரேமா:** “ஏன் நோய் வராது? கொலை செஞ்ச பாவம் சும்மா விடுமா?”

**தம்பிதுரை:** “சத்தியமா சொல்றேன்.... சந்திரமோகன் பாமா கல்யாணத்துக்கு எங்க அப்பா சம்மதிக்காதது உண்மைதான். ஆனா அதுக்காக கொலை செஞ்சாருங்குற பழியை மட்டும் அவர் பேர்ல போடாதே. அப்படிப் பட்ட கொடூரமான குடும்பமா இருந்தா எங்க குலக்கொழுந்து கண்ணனை அழைச்சுட்டு



வர்றதுக்கு நான் இங்க வருவேனா?”

**பிரேமா :** “கண்ணனா? அவனை ஏன் தேடுறீங்க ?”

**தம்பிதுரை :** ‘‘உன் அனுமதியோட அவனை இரத்தினகிரி அரண்மனைக்கு அழைச்சுட்டுப் போறதுக்குத்தான்”

**பிரேமா :** “நடக்காது. நடக்கவே நடக்காது.”

**தம்பிதுரை:** ‘‘அவனை எங்கிட்ட ஒப்படைச்சா எவ்வளவு வேணும்னாலும் பணம் தர்றேன்”

**பிரேமா :** ‘‘பணம், பதவி, பட்டம், அந்தஸ்து, ஆனை சேனை, ஆள் அம்பு எல்லாம் போய் மானியம் வாங்கிட்டு இருக்கிற உங்ககிட்ட பணம் ஒண்ணுதானே பாக்கி இருக்கு? அதை வச்சு என் வைராக்கியத்தை விலை பேச வந்துருக்கியளா? யாருக்கு வேணும் உங்க பணம்? கொண்டு வந்த பணத்தைக் கொண்டுபோய் கோவா கடற்கரையில எறிஞ்சுட்டுப் போய் சேருங்க ஊருக்கு” என்று தம்பி துரையை விரட்டுகிறாள்.

இவ்வாறு ஜமீன் கௌரவத்துக்கும் பணத் திமிருக்கும் எதிரான மிகக் கூர்மையான வசனத்தை கலைஞர் எழுதியுள்ளார்.

பிறகு பணத்தாசை பிடித்த ஓனாசிஸ்தான் சந்திரமோகன்- பாமா கொலைக்குக் காரணம் என்பதை அறிந்து கண்ணனை, பிரேமா அவனின் தாத்தா பாட்டியிடம் ஒப்படைக்கிறாள். தம்பிதுரை, பிரேமாவைத் தன் பெற்றோரது சம்மதத்துடன் சாதி, வர்க்கம் பாராது திருமணம் செய்து கொள்வதாகவும் கலைஞர் திரைக்கதையை எழுதியதன் மூலம் தனது திராவிட இயக்க சமத்துவக் கொள்கையை இப்படத்திலும் நிலைநாட்டினார்.

...காட்சி விரியும்

---

## அரவணைக்கும் அரசு வாழ்க!

‘தமிழ்நாட்டு மக்கள், தம் முதலமைச்சரை புறநானூற்றுப் பாடலில் மன்னனை வாழ்த்துவதுபோல வாழ்த்துவர்’ என எழுத்தாளர் அழகிய பெரியவன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவிலிருந்து...

“இந்த ஆட்சி எப்படி இருக்கிறது?” என்று கிராமப்புறத்தில் இருக்கும் ஒரு வயதான அம்மாவிடம் கேட்டேன்.

“மாசம் பதினஞ்சி ஆனா, டான்னு ஆயிரம் ரூபா கணக்குல வந்து உளுந்துடுது எப்பா. வேற என்னா ஒணும்? அந்தப்பன் நல்லா இருக்கணும்” என்றார் அவர்.

இன்று காலையில் (13.02.2026) அவரிடம் விசாரித்திருந்தால், தன்னுடைய கணக்கில் ஐந்தாயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டதைச் சொல்லி, நெகிழ்ச்சியில் கண்கலங்கி இருப்பார்.

எளிய மக்களின் மனங்களில் இடம் பிடிப்பவர்களே மாபெரும் தலைவர்கள். அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், எளிய மக்களின் மனங்களில் இடம் பிடித்துவிட்ட மாபெரும் தலைவர். இதில் சிறிதும் மிகையில்லை.

ஓர் அரசின் சட்டங்களும் திட்டங்களும் தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகைகளாகவும், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் பணப் பலன்களாகவும், நிலவுடைமையாளர்களுக்கு மானியங்களாகவும் எனப் பல வகைகளில் சென்று சேர்கின்றன. ஆனால், எளிய உழைக்கும் மக்களுக்கோ நலத்திட்டங்கள் என்ற வடிவத்தில்தான் சென்று சேர்கின்றன.

ஓர் அரசு இயங்குகிறது, அது தன்னைக் குறித்து அக்கறை கொள்கிறது என்பதை, நலத்திட்டங்களின் வழியாகத்தான் எளிய மக்கள் உணர்ந்துகொள்கிறார்கள். இது ஒரு மனிதரை நேரடியாக அரவணைப்பதைப் போன்றது. வெறுப்பிலும் வன்மத்திலும் இருக்கிறவர்களுக்கும், செழிப்பில் மிதக்கிறவர்களுக்கும், சமூக விழிப்புணர்வும், மானுட அக்கறையும் இல்லாதவர்களுக்கும் இது புரியவே புரியாது.

ஆனால், எளிய மக்களோ முதல்வரை, நதி மணலின் எண்ணிக்கையைப் போலவும், கழனி விளையும் நெல்மணிகளின் எண்ணிக்கையைப் போலவும் வாழ்க!‘

“புல் இலை வஞ்சிப் புறமதில் அலைக்கும்
கல்லென் பொருநை மணலினும், ஆங்கண்
பல் ஊர் சுற்றிய கழனி
எல்லாம் விளையும் நெல்லினும் (வாழிய) பலவே” என்று வாழ்த்துவர்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்


கோ.குருசாமி



### நெருக்கடி நிலை காலத்தில் தலைவரோடு...

1976-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை அமலில் இருந்த போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்திக்க, தமிழ்நாடு எங்கும் இருந்து கழகத் தொண்டர்கள் கூட்டம் கூட்டமாக கிளம்பி வந்தனர். பொன்னேரியில், கழகத் தொண்டர்கள் மிசா வழக்கு நிதியைச் சேகரித்துக்கொண்டு தலைவரை நேரில் சந்தித்து வழங்கினோம். அப்போது, நான் எடுத்துக்கொண்ட புகைப்படம். தலைவர் எங்களுக்கெல்லாம் தைரியம் தந்து அனுப்பினார்.

**- கோ.குருசாமி, பொன்னேரி, திருவள்ளூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

கருவூலம்

## படி அரிசி ஒரு ரூபாய் வாக்குறுதி!

1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது, ‘கழகம் ஆட்சிக்கு வந்தால் ஒரு ரூபாய்க்கு, ஒரு படி அரிசி வழங்கப்படும்’ என்று வாக்குறுதி அளித்தார் பேரறிஞர் அண்ணா. அந்த வாக்குறுதி நிறைவேறும் வரை அமைச்சர்கள் சம்பளம் பெறமாட்டார்கள் என்றும் அறிவித்திருந்தார். கொடுத்த வாக்குறுதியின்படி, 1967-ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் தேதி முதல் பங்கீட்டுக் கடைகளில் ஒரு படி அரிசி ஒரு ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது. அதற்கு அடுத்த நாள் முதல், அமைச்சர்களும் தங்கள் சம்பளத்தைப் பெற்றனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131